முன்னாள் அமைச்சர் –

கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் இல்லத் திருமண விழா!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, அக். 30-

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் - கழகப் பொதுச் செயலாளர் துரை முருகன் அவர்களின் பெயர்த்தி - டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி.யின் புதல்வி மணவிழாவை நவ.1 அன்று காலை சென்னை, ஈ.சி.ஆர். சாலை, ஆர்.கே.கன்வென்சன் சென்டரில் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

இம்மணவிழா வரவேற்பு நாளை (31.10.2026 - சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு கழக இளைஞர் அணி செயலாளர் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

இம்மணவிழாவில் முன்னாள் அமைச்சர்கள், கழக முன்னணி யினர் - மாவட்டச் செயலாளர்கள் - எம்.பி.க்கள் - எம்.எல்.ஏ.க்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழா பற்றிய விவரம் வருமாறு:



கழகப் பொதுச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் துரை முருகன் - சாந்தகுமாரி துரை முருகன் ஆகியோரின் பெயர்த்தியும் டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. - சங்கீதா கதிர் ஆனந்த் ஆகியோரின் புதல்வியுமான செந்தாமரைக்கும், திட்டக்குடி ரவிகண்ணன் - தீபா ரவி ஆகியோரின் புதல்வர் தீபக் ரவிக்கும் மணவிழா 1.11.2026-ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் சென்னை ஈ.சி.ஆர். சாலையில் அமைந்துள்ள ஆர்.கே.கன்வென்சன் சென்டரில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. நன்றி கூறுகிறார்.

இம்மணவிழாவில் முன்னாள் அமைச்சர்கள், கழக முன்னணி யினர், சட்டமன்ற நாடாளுமன்ற இந்நாள்-முன்னாள் உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள் - கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

சிவகங்கை மாவட்டத்தில் தடை உத்தரவு!

சிவகங்கை மாவட்டத்தில் மகளிரணி ஆர்ப்பாட்டம் ஒத்திவைப்பு!

மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை , அக். 30-

நாளை (31ம்தேதி) நடைபெற இருந்த மகளிரணிஆர்ப்பாட்டம் ஒத்தி வைக்கப்படு கிறது . இதுகுறித்து சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் - முன்னாள் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களால் மாவட்ட தலைநகரங்களில் நாளை (31 ஆம் தேதி) த.வெ.க. ஆட்சியின் அவல நிலை, விலைவாசி உயர்வு , பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பற்றநிலை, சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, போன்றவற்றை கண்டித்து மகளிரணி அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவித்திருந்தார்.



சிவகங்கை மாவட்டத்தில் மாமன்னர் மருது பாண்டியர்கள் குருபூஜை, பசும்பொன் தேவர் குருபூஜையினை முன்னிட்டு காவல்துறையின் சார்பில் 144 தடை உத்தரவு 20ஆம் தேதி முதல் 31ம் தேதி வரை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அனுமதி கிடைக்காது. இதை முன்னிட்டு நாளை (31ஆம் தேதி) நடைபெறுவதாக இருந்தமகளிரணி ஆர்ப்பாட்டம் ஒத்தி வைக்கப்படுகிறது.

இது குறித்து தலைமை கழகத்திற்கு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

எனவே நாளை சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற இருந்த ஆர்ப்பாட்டம் பின்பு வேறொரு தேதியில் தலைமைக் கழகம் அனுமதி பெற்று நடைபெறும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் கலையரசன் கைது!

கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளையை நெரிக்க முயலுவதா?

மனித நேயமக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எம். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. கண்டனம்!

சென்னை, அக்.30-

பேராசிரியர் கலையரசன் கைதின் மூலம் கருத்துச் சுதந்திரத்தின் குரல் வளையை நெரிக்க முயலும் நடவடிக்கைக்கு கடும் கண்டனம் தெரிவித்து

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் சட்ட மன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

புகழ்பெற்ற சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் (MIDS) பேராசிரியரான முனைவர் கலையரசன் அவர்கள், காவல்துறையினரால் அதிகாலையில் கைது செய்யப்பட்டதாக வெளியாகியுள்ள செய்தி பெரும் அதிர்ச்சியளிக்கிறது. சீருடை அணியாத காவலர்கள் அவரைக் கைது செய்து வாடகை வாகனத்தில் அழைத்துச் சென்றது கடும் கண்டனத்திற்குரியது.



பேராசிரியர் கலையரசன் சாதாரணமான கல்வியாளர் அல்ல. ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட The Dravidian Model நூலின் ஆசிரியர்களில் ஒருவர். ஒன்றிய அரசின் திட்டக்குழுவில் பணியாற்றியதோடு, தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆய்வறிக்கை தயாரிப்பிலும் பங்களித்தவர். தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான மாநில காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவிலும் உறுப்பினராக உள்ளவர்.

அரசின் பொருளாதாரக் கொள்கைகளையும் விலைவாசி உயர்வையும் விமர்சிப்பது குற்றமல்ல; அது ஜனநாயகத்தின் அடிப்படை உரிமை!

திராவிட மாடல் ஆட்சியின் பொருளாதாரச் சாதனைகள் குறித்து ஆய்வு செய்தவரும், அரசின் கொள்கைகள் குறித்து கருத்துத் தெரிவிக்கும் உரிமை கொண்டவருமான ஓர் அறிஞர், தனது விமர்சனக் கருத்துகளுக்காகக் குறிவைக்கப்பட்டிருப்பது கருத்துச் சுதந்திரத்தின் மீதான நேரடித் தாக்குதலாகும். ஆட்சியாளர்களுக்குப் பிடிக்காத கருத்துகளை முன்வைப்பவர்களை அச்சுறுத்துவதன் மூலம் விமர்சனங்களை ஒடுக்கிவிடலாம் என்று எந்த அரசும் நினைக்கக் கூடாது.

முந்தைய ஆட்சிக் காலங்களிலும் சுதந்திரமாகக் கருத்துகளை முன்வைத்ததாக அறியப்படும் பேராசிரியர் கலையரசன் போன்ற கல்வியாளர்களின் கருத்துகளை எதிர்கொள்வதற்குப் பதிலாக, அவர்களைக் கைது செய்து அச்சுறுத்தும் போக்கு ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல. அரசின் செயல்பாடுகளை விமர்சிக்கும் உரிமை கல்வியாளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் மட்டுமல்ல; ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு.

காவல்துறை என்பது ஆட்சியாளர்களின் அரசியல் விருப்பங்களை நிறைவேற்றும் கருவி அல்ல; சட்டத்தையும் குடிமக்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் அமைப்பு. கைது நடவடிக்கையில் சட்ட நடைமுறைகள் மீறப்பட்டிருந்தால், அதற்குப் பொறுப்பானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஜனநாயகத்தில் அரசை விமர்சிப்பது குற்றமல்ல; விமர்சனத்தை ஒடுக்க அதிகாரத்தைப் பயன்படுத்துவதுதான் ஜனநாயகத்தின் மாண்பைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இராணிப்பேட்டை தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனை கூட்டம் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட தி.மு.க. செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் நடந்தது. நாளை நடைபெற உள்ள மகளிர் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்தும்இதில் விவாதிக்கப்பட்டது. மாவட்ட நிர்வாகிகள் ஏ.கே.சுந்தரமூர்த்தி துரை மஸ்தான் குமுதா குமார் தலைமைச் செயற்குழு உறுப்பினர் அ.அசோகன் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெயந்தி திருமூர்த்தி மாவட்ட மகளிர்அணி தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர மன்ற தலைவர்கள், ஒன்றிய அமைப்பாளர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சாலைகளில் 'டாடா' காட்டும் முதலமைச்சரால்

ரவுடிகளும் கொலை செய்துவிட்டு 'டாடா' காட்டி தப்பிக்கின்றனர்!

தூத்துக்குடி பெண்மணி கொலையை சுட்டிக்காட்டி உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக்.30-

அடிக்கடி சாலைகளில் 'டாடா' காட்டும் முதலமைச்சர், சட்டம் ஒழுங்கிற்கும் டாடா காட்டி விட்டதால், ரவுடிகளும் சர்வ சாதாரணமாக கொலை செய்துவிட்டு டாடா காட்டிவிட்டு தப்பித்துக் கொள்கின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எக்ஸ் வலைதளப் பக்கத்தில், தூத்துக்குடி பெண்மணி கொலையை சுட்டிக்காட்டி பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எக்ஸ் தளப் பதிவு வருமாறு:-

இன்னும் எத்தனை கொலைகள் நடக்கும் இந்தக் கோமாளிகள் ஆட்சியில்?

தூத்துக்குடியில் வீட்டில் தனியாக இருந்த சசிகலா என்னும் பெண்ணை மர்ம நபர் ஒருவர் வெட்டிக்கொலை செய்துள்ள சம்பவம், இந்த ஆட்சியில் மக்களுக்கு இனி எந்தப் பாதுகாப்பும் இல்லை என்பதையே உணர்த்துகிறது.



தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் 4 நாட்களில் 7 கொலைகள் நடந்திருப்பதற்கு காவல்துறை மற்றும் அதனை கையில் வைத்திருக்கும் டம்மி முதலமைச்சரின் தோல்வியே காரணம்.

அடிக்கடி சாலைகளில் டாடா காட்டும் முதலமைச்சர், சட்டம் ஒழுங்கிற்கும் ஒரேயடியாக டாடா காட்டி விட்டதால், ரவுடிகள் Casual-ஆக கொலை செய்துவிட்டு டாடா காட்டி தப்பிக்கின்றனர்.

பழிவாங்கவும் - பழிபோடவும் ஆலாய்ப் பறக்கும் இந்த அரை வேக்காடு ஆட்சியாளர்கள், மக்கள் பலியாவதை எப்போது தடுப்பார்கள்? Dummy CM சொன்ன Efficient Officers எல்லாம் எங்கே போனார்கள்?

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

அறிவுடைமையின் அருமை புரியாதவர்கள் நடத்தும் ஆட்சியில்

கலைஞர்களும் கல்வியாளர்களும் வஞ்சிக்கப்படுவார்கள்!

பொருளாதார அறிஞர் கலையரசன் கைதைக் கண்டித்து – கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலைதளப்பதிவு !

சென்னை, அக்.30-

பேராசிரியரும் பொருளாதார அறிஞருமான கலையரசன் அராஜகமான முறையில் நேற்று கைது செய்யப்பட்டதையடுத்த விடுத்த வலைதளப்பதிவில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., "அறிவுடைமையின் அருமை புரியாதவர்கள் நடத்தும் ஆட்சியில் கலைஞர்களும் கல்வியாளர்களும் வஞ்சிக்கப்படுவார்கள்!" எனத் தமது வேதனையை வெளிப்படுத்தியுள்ளார்.

அவரது வலைதளப் பதிவு வருமாறு:-

பேராசிரியரும் பொருளாதார அறிஞருமான கலையரசன் அவர்களை நேற்று அதிகாலையில் பொய்க் குற்றச்சாட்டுகளைக் கூறி அராஜகமான முறையில் கைது செய்து,



அலைக்கழித்து, மன உளைச்சலுக்கு ஆளாக்கியுள்ள தவெக அரசுக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விலைவாசி உயர்வு, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை என இந்த அரசின் நிர்வாகச் சீர்கேடுகளை விமர்சிக்கும் எவர் ஒருவரும் காவல்துறையின் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்ற மிரட்டலாகத்தான் இந்தக் கைது சம்பவம் இருக்கிறது.

அறிவுடைமையின் அருமை புரியாதவர்கள் நடத்தும் ஆட்சியில் கலைஞர்களும் கல்வியாளர்களும் வஞ்சிக்கப்படுவார்கள்.

த.வெ.க.வின் ஆட்சி அப்படியானதே!

இவ்வாறு அப்பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேவர் குரு பூஜைக்கு வருகை தரும் கழகத் தலைவருக்கு உற்சாக வரவேற்பு !

மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்ஷா முத்து ராமலிங்கம் வேண்டுகோள்!

இராமநாதபுரம், அக்.30-

தெய்வீக திருமகன் பசும்பொன் உ.முத்துராமலிங்க தேவர் அவர்களின் குருபூஜை விழாவினை முன்னிட்டு இன்று (30ம் தேதி) இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை தரும் கழக தலைவர் தமிழ்நாட்டில் பொற்கால ஆட்சி தந்த திராவிட மாடல் நாயகர் முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை எழுச்சியோடு வரவேற்க . இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பசும்பொன் தேவர் நினைவிடத்தில் இன்று (30.10.2026) காலை 8, மணி அளவில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

த.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, விலைவாசி உயர்வைக் கண்டித்து

விழுப்புரத்தில் மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

விழுப்புரம், அக்.30-

விழுப்புரம் மத்தியம், தெற்கு, வடக்கு மாவட்ட திமுக மகளிர் அணி சார்பில் நாளை (31.10.2026-சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு விழுப்புரம், புதிய பேருந்து நிலையம் அருகில், நகராட்சி திடலில் த.வெ.க அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள் - குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.



இந்த கண்டன ஆர்ப்பாட்டம் விழுப்புரம் மத்திய மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் A.G.செல்வி தலைமையில் நடைபெறுகிறது . விழுப்புரம் தெற்கு மாவட்ட மகளிர் அமைப்பாளர் K.அமுதா வரவேற்புரையாற்றுகிறார். மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், ஒன்றிய, மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள் முன்னிலையிலும், மாநில மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் M.தேன்மொழி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீத்தாபதி சொக்க லிங்கம் ஆகியோர் கண்டன உரையும், விழுப்புரம் வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் வி.திலகவதி நன்றிவுரையாற்ற உள்ளார்கள்.

இக்கண்டன ஆர்பாட்டத்தில் விழுப்புரம் மத்திய மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் நகர, ஒன்றிய, பேரூர் கழக முன்னாள், இந்நாள் தலைவர்கள், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்ட கவுன்சிலர்கள், நகர, ஒன்றிய, பேரூர் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் வெல்லும் தமிழ்ப்பெண்கள் ஆகியோர் கலந்துக் கொண்டு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடக்க உள்ளது. அது சமயம் மாநில / மாவட்ட நிர்வாகிகள், நகர, ஒன்றிய மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் / தலைவர்கள் / நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை நிர்வாகிகள் மற்றும் கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர். இரா. இலட்சுமணன் தெரிவித்துள்ளார்.

